JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 03.09.2022

**STC.No.692/2017** **Name: Vadivel** **S/o.Karuppanan PW**1

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)எனது வீடு 10, தச்சங்கரை என்ற இடத்தில் உள்து என்றால் சரிதான். பெருந்துறையில் இருந்து வடமுகம் வெள்ளோடு எத்தனை கி.மீ. தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 10 கி.மீ.தூரத்தில் இருக்கும். வடமுகம் வெள்ளோட்டில் இருந்து தச்சங்கரை என்ற இடம் சுமார் 10 கி.மீ.தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு பெருந்துறையில் வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். எனக்கு பெருந்துறையில் வீடு உள்ளதாக சொன்னால் அது பொய் என்றால் ஆமாம். பொய்தான். இந்த வழக்கில் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் இடம் எங்கு என்றால் தச்சங்கரையில் உள்ள எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். எனக்கு பேன் கார்டு உள்ளது என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டு வரவில்லை.

2)எனக்கு கரூர் வைஸ்யா வங்கி, வெள்ளோடு கிளையில் வங்கி கணக்கு உள்ளது. எனக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, வெள்ளோடு கிளையில் மற்றொரு வங்கி கணக்கும் உள்ளது. இந்த இரண்டு வங்கி கணக்கு தவிர வேறு வங்கி கணக்கு எதுவும் உள்ளதா என்றால் கார்ப்பரேசன் வங்கி, அனுமன்பள்ளி கிளையில் உள்ளது. எனக்கு வரக்கூடிய வருமானமும் மற்றும் செலவினங்களை இந்த மூன்று வங்கி கணக்கில்தான் செய்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த மூன்று வங்கி கணக்குகளின் வரவு செலவு கணக்குகளை பார்த்தால்தான் எனது வருமானம் பற்றிய விபரம் தெரியவரும் என்றால் சரிதான். எதிரியின் வீடு எங்கு உள்ளது என்றால் எனது வீட்டில் இருந்து அரை கி.மீ.தூரத்தில் எதிரியின் வீடு உள்ளது. எதிரி எனது சொந்த

ஊரில் குடியிருப்பதால் அவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

3)எனக்கும் எதிரிக்கும் எத்தனை வருடங்களாக வரவு செலவு உள்ளது என்றால் சுமார் 7 வருடங்களாக உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமான காசோலை கொடுப்பதற்கு முன்பாக 2-3 வருடங்களாக வரவு செலவு உள்ளது. 2-3 வருடங்களாக பத்தாயிரம், இருபதாயிரம், ஐம்பதாயிரம், ஒருலட்சம் வரை வாங்கியுள்ளார். எத்தனை முறை அவ்வாறு வாங்கியுள்ளார் என்றால் ஒரு நான்கு முறை வாங்கியுள்ளார். அவ்வாறு நான்கு முறை வாங்கியபோதும் நான் காசோலையும், புரோநோட்டும் எழுதிவாங்கிதான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு எதிரி என்னிடம் பணம் வாங்குவதால் நான் எதிரியின் காசோலையை எப்போதும் வைத்திருப்பேன் என்றால் பணம் அவர் திருப்பி கொடுத்ததும் நான் திருப்பி கொடுத்துவிடுவேன்.

4)எத்தனை நாட்களுக்கு ஒருமுறை எதிரி என்னிடம் பணம் வாங்குவார் என்றால் 10,15 நாட்களுக்கு ஒருமுறை கடன் வாங்குவார். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வரவு செலவுக்கு முன்பாக எதிரி எப்போது என்னிடம் பணம் வாங்கினார் என்றால் இந்த வரவு செலவிற்கு 10-15 நாட்களுக்கு முன்பாக பணம் வாங்கினார். அவ்வாறு பணம் வாங்கியபோது எப்போது திருப்பி செலுத்துவதாக எதிரி கூறினார் என்றால் ஒரு மாதம் கழித்து திருப்பி செலுத்துவதாக கூறினார். அவ்வாறு 10-15 நாட்களுக்கு முன்பாக எதிரிக்கு நான் பணம் கொடுத்தபோது அவரிடமிருந்து காசோலையும் கடனுறுதி சீட்டும் வாங்கினேன் என்றால் சரிதான்.

5)அவ்வாறு 10-15 நாட்களுக்கு முன்பாக வாங்கிய பணத்தை எதிரி ஒரு மாதத்தில் திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரிதான். எதிரி எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு தெரிந்த நபர்களுக்கு என்னிடம் இருந்து பணம் வாங்கி கொடுப்பார் என்றால் நான் எதிரிக்கு பணம் கொடுப்பேன். அவர் என்ன செய்வார் என்பது எனக்கு தெரியாது. எதிரி என்னிடம் பணம் வாங்கிய பின்னிட்டு என்ன செய்வார் என்பது எனக்கு

தெரியாது. ஈரோடு அரசு மருத்துவமனையில் கம்பவுன்டராக பணிபுரியும் சத்யகுமாரை எனக்கு தெரியாது. சத்யகுமார் மொடக்குறிச்சி அரசு மருத்துவமனையில் இருந்து பணி மாறுதல் ஆகி ஈரோடு அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. சத்யகுமாரின் குடும்பத்திற்கும் எனக்கும் எவ்வித பண வரவு செலவும் இல்லை என்றால் சரிதான்.

6)அதேபோல் சித்தோட்டை சேர்ந்த செல்வி மற்றும் அவரது மகன் வெள்ளியங்கிரி ஆகியோர்களை எனக்கு தெரியாது. செல்வியின் குடும்பத்தார் அவர்களது வீட்டு பத்திரத்தை வைத்து என்னிடம் எந்த தொகையும் பெறவில்லை. செல்வியின் குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்கும் எவ்வித வரவு செலவும் எதுவும் கிடையாது என்றால் சரிதான். தண்ணீர்பந்தல் எனது ஊரில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 4 கி.மீ இருக்கும். தண்ணீர்பந்தல் ஊரை சேர்ந்த அருள்ஜோதி என்பவரை எனக்கு தெரியும். அருள்ஜோதி என்னிடம் பணம் வாங்கியுள்ளார் என்றால் 10 வருடத்திற்கு முன்பாக வாங்கியுள்ளார்.

7)அருள்ஜோதி என்னிடம் தொடர்ந்து பண வரவு செலவு செய்து வருகிறாரா என்றால் இல்லை. அருள்ஜோதி என்பவர் அன்பழகன் என்பவருக்கு பழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அருள்ஜோதி என் மீது வெள்ளோடு காவல் நிலைத்தில் புகார் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. அருள்ஜோதியிடம் இருந்து எனக்கு வரவேண்டிய தொகை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. எனது மொபைல் எண்.9659530675 என்றால் சரிதான். அன்பழகனின் தொலைபேசி எண்.9965942026 என்றால் சரிதான். எதிரி என்னுடைய வீட்டிற்கு எத்தனை மணிக்கு வந்து பணம் கேட்டார் என்றால் காலை 10 மணி இருக்கும். எதிரி என்னிடம் பணத்தை கேட்ட அன்றே நான் எதிரிக்கு பணம் கொடுத்துவிட்டேன்.

8)அன்றைய தினம் நான் வங்கிக்கு சென்றேனா என்றால் இல்லை.

அதற்கு முதல் நாள் வங்கிக்கு சென்றேனா என்றால் இல்லை. எப்போது வங்கிக்கு சென்றேன் என்றால் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக சென்றேன். எதற்காக வங்கிக்கு சென்றேன் என்றால் அது எனக்கு நினைவில்லை. ஏதாவது எனது தேவைக்கு பணம் வேண்டும் என்றால் நான் என்னுடைய வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்து வருவேனா என்றால் வங்கியில் இருந்தும் எடுப்பேன். விவசாய வருமானத்தின் மூலம் பணம் கையில் இருப்பதை கொண்டும் வைத்து செலவு செய்வேன்.

9)எனது பேன் கார்டு நம்பரை மூன்று வங்கி கணக்கிலும் இணைத்துள்ளேன் என்றால் இருக்கலாம். எனது வருடாந்துரை வருமானத்தை பேன் கார்டு மூலமாக வருமானவரி துறைக்கு கணக்கு காட்டுகிறேன் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லியுள்ள ஒரு லட்ச தொகை எருமை விற்றதால் எனக்கு கிடைத்தது. எருமை யாருக்கு விற்றேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எப்போது எருமை விற்றேன் என்றால் பணம் கொடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக விற்றிருப்பேன். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளுக்கு ஒரு ரூபாய் வட்டி கொடுத்தார்.

10)ஒரு ரூபாய் வட்டி வாங்கிய விபரத்தை எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த விபரங்களை சொன்னபிறகுதான் எனது வழக்கறிஞர் எதிரிக்கு அறிவிப்பு வழங்கினார் என்றால் சரிதான். அறிவிப்பை எதிரி வாங்கிய பின்னிட்டு என்னை வந்து பார்த்தார் என்றால் சரிதான். எத்தனை முறை பார்த்தார் என்றால் ஒரு முறை பார்த்தார். எதற்காக அறிவிப்பு அனுப்பியுள்ளீர் என எதிரி என்னிடம் கேட்டார் என்றால் சரிதான். எதிரி அப்போது என்னிடம் பைசல் பேசிகொள்ளலாம் என சொன்னார் என்றால் சரிதான். நானும் பேசிகொள்ளலாம் என சொன்னேன். நான் அவ்வாறு சொன்ன நம்பிக்கை அடிப்படையில் எதிரி சரி என சொல்லி சென்றார் என்றால் சரிதான்.

11)பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை சம்பந்தமாக வெள்ளோடு காவல் நிலையத்தில் என் மீது எந்த புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அருள்ஜோதிக்கு நான் வட்டிக்குதான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு வட்டிக்கு பணம் கொடுப்பது சம்பந்தமாக பைனான்ஸ் எதுவும் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மீது எதிரிக்கு நம்பிக்கை உள்ளது என்றால் சரிதான். எதிரி என்னிடம் வாங்கியதாக சொல்லப்படும் தொகை செலுத்தியபிறகும் எதிரி என்னிடம் அறிமுகப்படுத்திய நபர்களிடம் இருந்து வரவேண்டிய தொகையை தற்காத்துக்கொள்வதற்காக எதிரி என்னிடம் ஏற்கனவே கொடுத்திருந்த காசோலையை எதிரியிடமிருந்த எந்த விதமான சட்டபூர்வமான தொகையும் எதிரிக்கு செலுத்தாமல் இந்த வழக்கு காசோலையை பயன்படுத்தி எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12)அதேபோல் நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்று கொண்டு என்னை சந்தித்தபோது நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கபோவதில்லை என கூறியதன் பேரில் அவர் என் மீது நம்பிக்கையுடன் இருந்தார் என்றும் அந்த நம்பிக்கைக்கு விரோதமாக எதிரி மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போன வாய்தாவிற்கு முதல் நாள் நான் எதிரிக்கு போன் செய்து எதிரியிடம் பேசினேன் என்றால் பேசியிருக்கலாம். எதிரிக்கும் எனக்கும் எந்த விதமான சட்டபூர்வமான பண பரிமாற்றம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் நான் தொகை கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

13)என்னிடம் அன்றைய தேதியில் தொகை இருந்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த விதமான வழக்கு சம்பந்தப்பட்ட எந்த நடைமுறைகளும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடமிருந்து வாங்கிய தொகை திருப்பி செலுத்திய பிறகும் இந்த வழக்கு காசோலைகளுக்கு நான் எதிரிக்கு திருப்பி செலுத்தாமல் அவர் என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு விரோதமாக நடந்துகொள்கிறேன்

என்றால் சரிய்லல. எதிரி எனக்கு சட்டப்படியாக கொடுக்க வேண்டிய தொகை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

14)எதிரி பெருந்துறையில் உள்ள என்னுடைய வீட்டில் பணம் பெற்றுகொண்டதாக புகாரில் சொல்லிவிட்டு தற்போது தச்சங்கரையில் உள்ள வீட்டில் பணம் கொடுத்ததாக சொல்வதிலிருந்து நான் எதிரி மீது பொய்யாக மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.